




## ‘வெல்வோம் 200 – படைப்போம் வரலாறு’ -

# முதலமைச்சரின் சொல்லை மனதில் ஏந்தி ஒவ்வொரு நாளும் உழைப்போம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கிச் சிறப்புரை!

**சென்னை,ஜன.11–**

**சென்னை, இராயப்பேட்டையில், சென்னை மேற்கு மாவட்டக் கழகத்துக்கு உட்பட்ட, சேப்பாக்கம் பகுதி கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் என 1500 பேருக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று முன்தினம் பகுதிச் செயலாளர் எஸ். மதன் மோகன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, `வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு’ எனும் முதலமைச்சர் அவர்களின் சொல்லை, மனதில் ஏந்தி ஒவ்வொரு நாளும் உழைத்து, 2026-இல் மகத்தான வெற்றியைப் பெற்று ஏழாவது முறையாக கழக ஆட்சியை அமைத்திடுவோமென உரையாற்றினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய முழு உரையின் விவரம் வருமாறு:**

முதலில் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மிகச்சிறப்பாக மதன்மோகன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### நன்றியும் வாழ்த்தும்!

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்தித்து பொங்கல் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் மதன்மோகன் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கும், கலந்து கொண்ட உங்கள் அத்தனைப்பேருக்கும் முதலில் என் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டும் இதே அரங்கத்தில், இதே மாதிரி ஒரு பொங்கல் பரிசு வழங்குகின்ற நிகழ்ச்சி நடந்தது. எனக்கு இன்னும் இந்த மேடையில் பேசியது ஞாபகம் இருக்கிறது. அப்போது, உங்களிடத்தில் ஒரு வேண்டுகோள் வைத்தேன். அப்போது, நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. எனவே, நம் மத்திய சென்னைக்கு உட்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணிப் பகுதியில் தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக நிறுத்துகிறாரோ? அவர் யாராக இருந்தாலும், மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தர வேண்டும் என்று உங்களிடத்தில் வேண்டுகோள் வைத்தேன். தலைவர் அவர்கள், அண்ணன் தயாநிதி மாறன் அவர்களை, வெற்றி வேட்பாளராக உங்களிடத்தில் ஒப்படைத்தார்.

### சட்டமன்ற உறுப்பினர்களுள் போட்டி!

இன்னும் சொல்லப்போனால், இங்கே மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுள் ஒரு போட்டியே இருந்தது. ஆயிரம்விளக்கா, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியா, அண்ணா நகரா என்று. அதில் அண்ணாநகர் கடும்போட்டி. திரு மோகன் அவர்கள் சொன்னார் நாங்கள்தான் வெற்றிப்பெற்று காட்டுவோம் என்று சொன்னார்.

மருத்துவர் எழிலன், `என்னையும் போட்டியில் சேர்த்துக்கொள்ளுங்கள்’ என்று சொன்னார். `வாங்க பார்த்துக்கொள்ளலாம்’ என்று சொல்லி, சொன்னதைச் செய்துகாட்டிய தொகுதி, நம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணித் தொகுதி.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்களைக் கிட்டத்தட்ட 2 லட்சத்து 42 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தார்கள். அதிலும், நம் சேப்பாக்கம் திருவல்லிக்கேணித் தொகுதி மட்டும் 56 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில், நீங்கள் வெற்றிபெற வைத்துக் காட்டுனீர்கள். அந்தப் பெருமை அத்தனையும் உங்களுக்குத்தான்.

### படைப்போம் வரலாறு!

இந்த வருடம் உங்களிடத்தில் கேட்பது எல்லாம் அதே வேண்டுகோள்தான். இன்னும் சரியாக 13, 14 மாதங்கள்தான் இருக்கின்றன, நம் கைகளில். மிகமிக முக்கியமான ஒரு சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள இருக்கிறோம். தலைவர் அவர்கள் ஏற்கனவே, சொல்லிவிட்டார், `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு’ என்று 200 தான் நமது இலக்கு.

அந்த இருநூறில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி நிச்சயம். அந்த 200 கணக்குகளில் 1-வது தொகுதி நம் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிதான். இங்கிருந்துதான் நம் கணக்கை ஆரம்பிக்கப் போகிறோம். நாம் வெற்றிப்பெற போவது உறுதி. நான் உங்களிடத்தில் கேட்கப்போவது எல்லாம் அந்த வெற்றி இன்னும் அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் யாரை வேட்பாளராக அறிவித்தாலும் சரி, இந்த முறை தலைவர் என்னை, வேறு தொகுதிக்கு மாற்றினாலும் மாற்றலாம். தலைவர் மாற்றினாலும், நீங்கள் விடமாட்டீர்கள்.

### மக்கள் மகிழ்ச்சி!

இப்போது தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களுக்குச் செல்கிறேன். எல்லோரும் சொல்கிறார்கள் நம் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணித் தொகுதியில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். என்ன குறைகள் சொன்னாலும், உடனே நடக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு பாதி காரணம் நம் சட்டமன்ற அலுவலகம் என்றாலும், மீதி பாதி காரணம் இங்கு வந்திருக்கின்ற கழக நிர்வாகிகள் நீங்கள்தான்.

ஏனென்றால், மாதத்தில் 10, 15 நாட்கள் நான் சென்னையில் இருப்பதில்லை. மற்ற மாவட்டங்களுக்கு அரசுப் பயணமாக, கழகத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு சுற்றுபயணம் செய்கிறேன். ஆனால், மாதந்தோறும் இங்கு இருந்து நம் தொகுதிக்கான பணிகளை எல்லாம் சிறப்பாகச் செய்து, தினமும் மக்களை சந்தித்து எந்தக் குறையாக இருந்தாலும் சரி, மழை அடித்தாலும் சரி, புயல் அடித்தாலும் சரி என்ன பிரச்சனை என்றாலும், மக்களுடன் இருந்து அந்தப் பணிகளை ஆற்றுவது, கழக நிர்வாகிகளாகிய நீங்கள்தான். எங்கு போனாலும் சேப்பாக்கத்தின் செல்லப்




பிள்ளை என்று சொல்கிறார்கள். எனவே, அந்தப் பெருமை முழுக்க, முழுக்க உங்களையே சேரும்.

### 13 மாதங்கள்தான் இருக்கின்றன!

எனவே, மக்களுடன் நெருங்கிப் பழகுங்கள். பாக முகவர்கள் உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே, நிகழ்ச்சிகளில் நம் தலைவர் அவர்களும் சரி, மாவட்டச் செயலாளரும் சரி உங்களுக்குத் தகுந்த அறிவுரை சொல்லி இருப்பார்கள். இன்றும் 13 மாதங்கள்தான் இருக்கின்றன.

இந்த 13 மாதங்களில் ஒவ்வொரு வாக்காளரையும், நாம் நேரடியாக, குறைந்தது நான்கு முறையாவது சந்தித்து இருக்க வேண்டும். ஒவ்வொரு வீடாகச் சென்று, ஏறி இறங்க வேண்டும். கண்டிப்பாகச் சொல்கிறேன். நம் தொகுதியில் ஒவ்வொரு வீட்டிலும் நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டங்களில் ஏதாவதொரு திட்டத்தின் பயனாளி நிச்சயமாக இருப்பார்.

அவர்களிடம் சென்று நம் கழக அரசின் சாதனைகள், எவ்வளவோ சாதனைகள்... மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். மகளிருக்கு கலைஞர் உரிமைத்தொகை திட்டம். கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

### புதுமைப்பெண் திட்டம்!

நேற்று கூட சட்டமன்றத்தில் நான் பேசும்போது குறிப்பிட்டேன். ஒரு சில இடங்களில் குறைகள் இருக்கின்றன. முதலமைச்சரின் ஆலோசனை பெற்று கண்டிப்பாக, அடுத்த மூன்று மாதங்களில் இதுவெல்லாம் சரிசெய்யப்பட்டு தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் கண்டிப்பாக வந்து சேரும் என்று நேற்று சட்டமன்றத்தில் பேசி இருக்கிறேன்.

இந்தத் திட்டங்களையெல்லாம் மக்களிடம் கொண்டு சேருங்கள். பெண்கள் படிப்பதற்கு `புதுமைப்பெண் திட்டம்’. மாணவர்கள் படிப்பதற்கு `தமிழ்ப்புதல்வன் திட்டம்’. இப்படி ஒவ்வொரு உதவியாகப் பார்த்து, பார்த்து நம் முதலமைச்சர் அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார். அதனால்தான், நம் தலைவர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் தொடர் வெற்றியைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 10 தேர்தல்களில் தொடர் வெற்றியைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

### அரசின் திட்டங்கள்!

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று. நான் உங்களிடம் கேட்பதெல்லாம், உங்களின் உறவினர்கள், உங்களின் நண்பர்கள், உங்களுக்குத் தெரிந்தவர்கள் தமிழ்நாடு முழுக்க இருப்பார்கள். அவர்களிடம் நீங்கள் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். நம் அரசின் திட்டங்களை எடுத்துச்சொல்ல வேண்டும்.

எதிர் தரப்பில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது. ஆளுநர் என்று ஒருவர் இருக்கிறார். அவர் என்ன செய்கிறார். வெறும் சட்டமன்றத்திற்கு வந்துவிட்டு செல்வதுதான் அவர் வேலை. தமிழ்நாடு என்று சொல்கின்ற வார்த்தையே பிடிக்காது, தமிழ்த்தாய் வாழ்த்து பிடிக்காது. இதையெல்லாம் ஒரு காரணமாகச் சொல்லி அவர் வெளிநடப்பு செய்துகொண்டு வெளியே போகிறார். எதிர்க்கட்சிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், அரசியல் செய்வதற்கு எதுவுமே இல்லை.

### ஞாபகம் இருக்கும்!

சமீபத்தில், சென்னையில் ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு தவறான சம்பவம் நடந்துவிட்டது. கண்டிப்பாக வருந்தத்தக்க சம்பவம்தான். ஆனால், நம் தலைவர் உடனே நடவடிக்கை எடுத்தார். சம்பவம் நடந்து 4 மணி நேரத்தில் குற்றவாளி கைது செய்யப்பட்டிருக்கிறார். வழக்கு இப்போது, நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆனால், அ.தி.மு.க ஆட்சியில் பொள்ளாச்சி சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். பல மாதங்கள் ஆகியும், பல பெண்கள் பாதிக்கப்பட்டும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தார்கள். கடைசியில், சி.பி.ஐ வந்தபிறகுதான் நடவடிக்கை எடுத்தார்கள்.

ஆனால், நம் ஆட்சியில் நிச்சயமாக எந்தவொரு குற்றவாளியையும் நம் முதலமைச்சர் அவர்கள் தப்பிக்க விடமாட்டார். இதைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் நேற்றும் சட்டமன்றத்தில் பேசி இருக்கிறார். இதையெல்லாம் மக்களிடம் சென்று சொல்லுங்கள்.

எனவே, கண்டிப்பாக இந்த வெற்றியை உறுதி செய்ய வேண்டியது நீங்கள்தான்.

### சமத்துவப் பொங்கல்!

நம் தலைவர் கலைஞர் அவர்கள் பொங்கல் விழாவை, சமத்துவப் பொங்கல் என்று சொல்வார். சமத்துவப் பொங்கல் என்றால், அனைவரும் கொண்டாடக்கூடிய பண்டிகைதான் பொங்கல். சாதி பார்க்காமல், மதம் பார்க்காமல், ஏற்றத்தாழ்வு பார்க்காமல் அனைவருக்குமான பண்டிகைதான் இந்த சமத்துவப் பொங்கல். மீண்டும் உங்கள் அத்தனைப்பேருக்கும் எனது சமத்துவப் பொங்கல் தின வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

### 200 என்பது நம் இலக்கு!

இங்கு பல அணிகள் வந்து இருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் அணி, அணியாகப் பிரிந்து விடக்கூடாது. தேர்தல் வேலையில் அத்தனைப்பேரும் ஒற்றுமையாக செயல்பட்டு, நாம் அனைவரும் ஒரே அணி. அது கலைஞர் வழியில் வந்த நம் தலைவரின் அணி என்பதை இந்தத் தேர்தலில் நாம் நிரூபிக்க வேண்டும். 200 என்பது நம் இலக்கு. அது சேப்பாக்கத்திலிருந்து துவங்க வேண்டும்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்!

இந்நிகழ்ச்சியில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தொகுதிப் பொறுப்பாளர் சி.எச்.சேகர், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவுச் செயலாளர் டாக்டர் சுபேர்கான், கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ், மாநில துணைச் செயலாளர் கௌதமன், மாவட்ட துணைச் செயலாளர் வி.எஸ்.கலை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், மிக்ஸி அலீப், இளைய ராஜா, எஸ்.கே.ராஜ், மல்லிகா பீபி, சிதம்பரம், வட்டக் கழகச் செயலாளர்கள் ஜெகதீசன், மகேஷ், சின்ராஜ், பிரபாகரன், கோபி, தமீம், ஜீவி, ஈஸ்வரி வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாலச்சந்தர், குட்டி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.



